1819

# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

### தமிழ் மொழியும் இலக்கியமும்

**தரம்: 08**

சுட்டெண்:.................................

நேரம்: 2 மணித்தியாலம்

பகுதி - I

- இவ்வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.
- சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

(01) குமண மன்னன் மீண்டும் அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்தான். அரியணை என்பதன் ஒத்தகருத்துச் சொல்

1) அரண்மனை 2) சாய்மனை 3) சிங்காசனம் 4) ஆசனம்

(02) அரசனுடைய கடமைகளில் ஒன்று உண்டி கொடுத்தலாகும். உண்டி என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1) மானியம் 2) பொருள் 3) கல்வி 4) உணவு

(03) வினாத்தாளில் மருள் தரும் வினாக்கள் காணப்பட்டன. மருள் என்பதன் எதிர் கருத்துச்சொல்

1) இருள் 2) தெருள் 3) அருள் 4) பொருள்

(04) பாலர்கள் நாம் கூடி ஆடி மகிழுவோம். பாலர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

1) பெரியவர் 2) சிறுவர் 3) விருத்தர் 4) பண்டிதர்

(05) அறிஞர் கூட்டம் அவை எனப்படுவது போல, மயில்களின் கூட்டம்

1) வரிசை 2) கூட்டம் 3) கணம் 4) குழாம்

(06) மாவின் இளம் பிஞ்சு வடு எனப்படுவது போல, பலாவின் இளம் பிஞ்சு

1) மூசு 2) காய் 3) பிஞ்சு 4) வடு

(07) ஆற்று நீர் சலசல என ஓடியது. சலசல என்பது

1) அடுக்குத்தொடர் 2) அடுக்கிடுக்குத்தொடர்
3) இரட்டைக்கிளவி 4) இணைமொழி

(08) ஆசிரியர் கற்பித்தவற்றை மாணவர் செவிமடுத்தனர். செவிமடுத்தல் என்பது

1) உவமைத் தொடர் 2) மரபுத்தொடர்
3) இடைத்தொடர் 4) வினைத்தொடர்

(09) நேற்று முழுவதும் நல்ல மழை பெய்தது............................கிணறுகள் நிரம்பவில்லை.
இடைவெளிக்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1) ஆகவே 2) எனினும் 3) ஏனெனில் 4) தான்

(10) பின்வருவனவற்றுள் ஒல்லாந்து மொழிச்சொல்லாக அமைவது

1) யன்னல் 2) கந்தோர் 3) தகவல் 4) சொத்து

(11) கிழக்கு வானில் பரிதி...............................தோன்றியது.

1) மெல்ல மெல்ல 2) விடியவிடிய 3) ஓடி ஓடி 4) பளபள

(12) குடியகல்வு என்பதனைப் பிரித்து எழுதினால்

1) குடிய + கல்வு 2) குடி + அகல்வு 3) குடி + யகல்வு 4) குடி + அகழ்வு

(13) தாய் தன் பிள்ளையை கண்ணும் கருத்துமாக வளர்த்தாள். இதில் கண்ணும் கருத்தும் என்பது,

1) இரட்டை மொழி 2) மரபுத்தொடர் 3) இணைமொழி 4) அடுக்குமொழி



kalvi.lk

(14) பின்வருவனவற்றுள் காலப்பெயராக அமைவது

1) நெல் 2) மாரி 3) பாரி 4) மணம்

(15) உயிர்முன் உயிர் புணர்தலுக்கு உதாரணம்

1) பூவிதழ் 2) கடலலை 3) மாம்பழம் 4) தேன்மொழி

(16) அறியாமை இருள் அழிக என்னும் வாக்கியம்

1) ஏவல் பன்மை வினை 3) வியங்கோள் வினை

3) ஏவல் ஒருமை வினை 4) முற்றுவினை

(17) பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப்பெயராக அமைவது

1) பறவை 2) மலை 3) வளையம் 4) நாற்காலி

(18) உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை

1) 90 2) 216 3) 126 4) 247

(19) தேனீயும் குளவியும் என்ற பாடலை இயற்றியவர்

1) மு.நல்லதம்பி 2) ச.ஞானசம்பந்தன் 3) க.வேந்தனார் 4) பி.நடராசன்

(20) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? இதற்கு ஒத்த பழமொழி

1) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?
2) கழுதை அறியுமா கற்பூர வாசனை?
3) உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
4) சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?

(1½x20=30புள்ளிகள்)

## பகுதி – II

❖ **1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வினாக்களுக்கும் 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் ஒன்றிற்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**(01) நீர் மேற்கொண்ட ஒப்படை கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) நீர் செய்த கணிப்பீடு எந்த அலகில் மேற்கொள்ளப்பட்டது?
2) ஆசிரியரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மூன்று தருக.
3) இக்கணிப்பீட்டிற்காக தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்?
4) இக்கணிப்பீட்டினால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் மூன்று தருக.

(4x3=12புள்ளிகள்)

**(02) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 – 200 சொற்களுக்குள் கட்டுரை எழுதுக.**

1) நீரின்றி அமையாது உலகு
2) சூழலைப் பேணுவோம்
3) முறிந்த வேப்பமரம் தன் கதை கூறல்
4) பொலித்தீன் அற்ற பொன்னான நாடு

(18புள்ளிகள்)

(03) உமது நண்பர் தமிழ்மொழித்தினப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றமையைப் பாராட்டி 100 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக.

(12புள்ளிகள்)



kalvi.lk

**(04) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) இரட்டை அவரையில் அதிகமுள்ள சத்து எது?
2) 'வான் சிறப்பு' எனும் அதிகாரத்தில் வலியுறுத்தப்படும் கருத்து யாது?
3) இராபர்ட் புரூஸ் வெற்றி பெறக் காரணமாக அமைந்தது எது?
4) இராமனுடைய நிழலாக விளங்குவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
5) இளங்குமணன் குமணனை எதற்காகக் கண்டித்தான்?
6) வாக்கிய இயைபு என்றால் என்ன?

(6x3=18புள்ளிகள்)

**(05) பின்வரும் பாடலைப் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

நெற்றி வியர்வை நிலத்திற் சொட்ட
நித்த உழைப்பில் நின்று நிலைக்கும்
'உத்தியோகம்' உழவன் அல்லால்
'எத்துரை' இங்கு ஏற்கும் ஏற்கும்

தன்னைக் கசக்கிச் சாறு பிழிந்து
மண்ணுலகத்தை வாழ வைக்கும்
கன்னன் இவனே கம்பன் கவிக்கும்
மன்னன் இவனே வாழ்க உழவன்!

1) இப்பாடலில் சிறப்பித்துப் போற்றப்படுபவன் யார்?
2) இப்பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளலின் பெயரைத் தருக?
3) உலக மக்களுக்காக உழவன் எவ்வாறு உழைக்கின்றான்?
4) இப்பாடலில் இடம்பெற்ற புலவனின் பெயர் என்ன?

(4x2½=10புள்ளிகள்)

**(06) கீழ்வரும் பந்தியை வாசித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**பாரதி ஓர் உலகக்கவி. தனது பாட்டுத் திறத்தாலே இப்பாரினை வலம் வந்தார். அவருடைய உணர்ச்சிமிக்க பாடல்கள் பாரத நாட்டு மக்களை மட்டுமன்றி முழு உலகத்தையும் கவர்ந்தது. பாரதியின் பாடல்களில் மொழிப்பற்று, சமூகப்பற்று, நாட்டுப்பற்று, ஆன்மீகம் முதலியன பாடுபொருட்களாயின. இயல்பான பேச்சுமொழியைத் தேர்ந்து அதனைத் தன்னுடைய கவிதைக்கான படைப்புமொழியாகக் கொண்டார் பாரதியார். அருமையான உள்ளக்காட்சிகளை எளிமை கொண்ட நடையில் எழுதினார். கவிதை இலக்கியத்துக்குப் புதிய படைப்புமுறையை உருவாக்கினார்.**

1) பாரதி எதனால் உலகை வலம் வந்தார்?
2) பாரதியின் பாடு பொருளாக அமைந்தவை எவை?
3) பாரதியின் கவிதையின் படைப்புமொழியாக எதனைக் கொண்டார்?
4) பாரதியின் எவற்றை எளிமையான நடையில் எழுதினார்?
5) பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.
   1. உள்ளம  2. உலகம்

(5x2=10புள்ளிகள்)



kalvi.lk

[07] பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1) அணி அணி
2) கதறிக்கதறி
3) பென்னம்பெரிய
4) இன்பதுன்பம்
5) மடமட

(5x2=10புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

May

**ONLINE CLASSES - 2025**

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**